**Source:** *Tamil Murasu,* p2
**Date:** 5 May 2022

# கூடுதல் மாணவர்களைச் சேர்க்க விரும்பும சட்டப் பள்ளி

சிங்கப்பூர் தேசிய பல்கலைக்கழகம், தனது சட்டப் பள்ளியில் கூடுதலான இளநிலை பட்டக் கல்வி மாணவர்களைச் சேர்த்துக்கொள்ளும் முயற்சிகளை மேற்கொண்டு வருகிறது. அந்த வகையில் சட்டத் துறையில் திறமை உள்ள பலதுறைத் தொழிற்கல்லூரி மாணவர்களைச் சேர்த்துக்கொள்ளவும் அது எண்ணம் கொண்டுள்ளது.

இவ்வாண்டு முதல், தொடக்கக் கல்லூரிகள், மிலெனியா கல்விக் கழகம் ஆகியவற்றில் முதல் 10 விழுக்காட்டுக்குள் வந்து சிறப்புத் தேர்ச்சி பெறும் மாணவர்கள் சட்டக் கல்விக்கு விண்ணப்பித்தால், தேசிய பல்கலைக்கழகம் கட்டுப்பாடுன்றி அவர்களைக் கருத்தில்கொள்ளும்.

Source: Tamil Murasu © SPH Media Limited. Permission required for reproduction.